

திருச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நம்பர் 1 டோல்கேட்டில் அமைக்கப்பட்டுள்ள புகழினி மருத்துவமனை அறிமுக விழாவில் பங்கேற்று மருத்துவமனையை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எம்.எல்.ஏ.க்கள் தியாகராஜன், கதிரவன் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெரு நற்கிள்ளி, லீலாதேவி டாக்டர் ரவிக்குமார் டாக்டர் கோப்பெருந்தேவி விஜயகுமார், சமயபுரம் அறங்காவல் குழு தலைவர் இளங்கோவன் ராஜசேகர், ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், சார்லஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 219 வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள அவரது உருவ சிலைக்கு திமுக. சார்பில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மேயர் அன்பழகன் ஆகியோர் தலைமையில் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் சேர்மன் துரைராஜ், பகுதி செயலாளர்கள் காஜாமலை விஜய், மோகன்தாஸ், இளங்கோ, நாகராஜன், திருச்சி மண்டல தொ.மு.ச. பொதுச்செயலாளர் குணசேகரன், கவுன்சிலர்கள் விஜயா ஜெயராஜ், ஜெ. கலைச்செல்வி, ராமதாஸ், வட்ட செயலாளர் மூவேந்திரன், பந்தல் ராமு, சிவா. முத்துப்பழனி, தர்மசேகர், சதீஷ்குமார், , தஸ்தகீர், மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி!

### மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஆக. 5-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு 07.08.2024 , புதன்கிழமை காலை 8 மணிக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் , விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகம் தொடங்கி கலைஞர் அறிவாலயம் வரை அமைதிப் பேரணியும், தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தப்படுகிறது.

மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன் , அன்னியூர் அ.சிவா, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன் , தயா.இளந்திரையன் , இரா.கற்பகம் , மாநில மகளிர் பிரச்சாரக் குழு செயலாளர் தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்நினைவேந்தல் நிகழ்ச்சியில் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் , சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, ஆக. 5-

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நிளனவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூக நீதி கொள்கைக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும். ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், தற்போது தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கவைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் 07.08.2024 அன்று புதன்கிழமை காலை புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, வட்டம், மற்றும் கிளைகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், நினைவு அஞ்சலி செலுத்தியும், அமைதி ஊர்வலம் நடத்தியும் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும்.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள். முன்னாள். இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள். முன்னாள். இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

# மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



மயிலாடுதுறை. ஆக.5

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவாகளின் 6ம் ஆண்டுநினைவுநாள்குறித்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச்செயலாளர்,பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

.தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும், சட்ட மன்ற ஜனநாயககத்திலும் மகத்தானசாதனைபடைத்த பன்முகஆற்றல்தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர்கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் போட்டியிட்ட 13 முறையும் வெற்றியை கண்டு5முறை20ஆண்டுகள் தமிழகமுதல்வராக இருந்த போது அனைவருக்கும் பாதுகாப்பான குடி நீர் வழங்கதமிழகம் முழுவதும் மேல் நிலை நீர் தேக்க தொட்டியை அமைத்தும், கை ரிக்ஷாவை ஒழித்தும், மகளிர் சுய உதவி குழுவை உருவாக்கி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ்பாஸ்,கலைஞர்காப்பீடு திட்டம் கொண்டு வந்தும், 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டம் கொண்டுவந்தது, முதல்பட்டதாரியின்படிப்பு செலவை அரசே ஏற்கும் திட்டம், கற்பிணி பெண்களுக்கு உதவித் தொகை என எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்த தமிழ்நாட்டிடன் வளர்ச்சிக்கு வித்திட்ட முத்தமிழ்அறிஞர்கலைஞர் அவர்கள்

50 ஆண்டுக்கு மேலாக தி,மு,க.தலைவர்,80ஆண்டு பொதுவாக்கை, 70 ஆண்டு திரைத்துறை என கலை, இலக்கியம், எழுத்து என தான் தொட்ட துணை அனைத்திலும்கலைஞருக்கு நிகர் கலைஞர் என்று வாழ்ந்து பல பிரதமர்கள், ஜனாதிபதிகளை உருவாக்கிய மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவு நாளான வரும் 7.8.2024 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் அமைதி ஊர்வலம் நடத்தி கலைஞர் திருஉருவபடம் வைத்து மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன்.

மேலும் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள்தோறும் அமைதி ஊர்வலம் நடத்தியும், முத்தமிழ்அறிஞர்கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், ஏழை, எளியவர்களுக்கு நல உதவிகள் செய்தும், அன்னதானம் செய்தும், மரக்கன்றுகள் நட்டும், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கிட வேண்டும். இதற்காக ஏற்பாடுகளைஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும்.

இந்நிகழ்ச்சிகளில்மாநில, மாவட்டக்கழகநிர்வாகிகள், நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள்,சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழுஉறுப்பினர்கள், ஒன்றிய,, நகர, பேருர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் புகழை சிறப்பித்திட வேண்டும். இவ்வாறுஅந்தஅறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

### தமிழ்நாட்டில் சாரண - சாரணியர் இயக்கத்தின்

# சர்வதேச அளவிலான வைர விழாக் கொண்டாட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, அக. 5-

தமிழ்நாட்டில் சாரண சாரணியர் இயக்கத்தின் சர்வதேச அளவிலான வைர விழா கொண்டாட்டங்கள் நடைபெறும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (03.08.2024) சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்ற பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில பொதுக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக் குழு கூட்டத்திற்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தலைமை வகித்தார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிகழ்ச்சியில் பேசும் போது ஒரு இக்கத்தின் இதயமாக திகழ்வது அந்த இயக்கத்தின் பொதுக் குழு தான். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின் சாரண சாரணியர் இயக்கங்களை வலுப்பெறச் செய்யும் நமது முன்னெடுப்புகள் இளைய சமுதயாத்தினரிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இது ஒரு முக்கியமான திட்டக் கூறு ஆகும். சாரண இயக்கத்தின் மீது தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். பாரத சாரண சாரணிய இயக்கத்தின் பொன்விழா கொண்டாட்டங்களில் தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அதே போல் பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழாவில் நமது தமிழக முதல்வர் அவர்கள் பங்கேற்பார்கள். முதற்கட்டமாக இந்த வைர விழா நடத்துவதற்கு தமிழக முதல்வர் அவர்கள் 10 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்.

இந்த வைரவிழா நடத்துவதற்கான இடம் தயாராக உள்ளது. இந்த விழாவில் பற்கேற்க 38 நாடுகளுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகளின் ஆர்வம் சிறப்பாக உள்ளது. இதை மனதில் வைத்துக் கொண்டு மிகப்பெரிய வெற்றி விழாவாக கொண்டாட உள்ளோம். இந்த வைர விழா ஒட்டுமொத்த தமிழகத்தின் பெருமையை உலக நாடுகளுக்கு உணர்த்தும் விழாவாக நடத்தும் மிகப்பெரிய வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு நமது இளயசமுதாயத்திற்கு மேலும் சாரண சாரணிய இயக்கத்தின் மீது ஆர்வமூட்ட முடியும்.

மாணவர்கள் சாரண சாணியர் இயக்க முகாம்களில் பற்கேற்று சேவை மனப்பான்மையுடன் செயலாற்றும்போது, அவர்களிடம் ஒற்றுமை உணர்வும், நல் பண்புகளும் வளரும்.

பள்ளிக் கல்வித்துறை சார்பில் தமிழகத்தில் உள்ள 138 தொகுதிகளுக்கு சென்று பல்வேறு ஆய்வு பணிகளை மேற்கொண்டுள்ளேன். செல்லும் இடங்களில் அங்கு செயல்படும் சாரண சாரணியர் இயக்க செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து வருகிறேன்.

இந்த சாரண சாரணியர் வைர விழாவில் பங்கேற்கும் சாரண சாரணிய மாணவர்கள் குறித்து அருகில் உள்ளவர்கள் பெருமையாக பேசுவார்கள். மேலும் நாமும் இந்த இயக்கத்தில் இணைய வேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் மனதில் ஏற்படும். இந்த வைரவிழாவில் சுமார் 12 இலட்சம் சாரண சாரணியர் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும். இனி வரும் காலத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் சாரண சாரணிய மாநில ஆணையத்தின் தலைவராக இருக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும்.

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை தங்களுக்கு சொந்த நிலங்களை பாதுகாத்து வைத்துள்ளது போல், சாரண இயக்கத்திற்கு சொந்தமான நிலங்களை பாதுகாத்து வைக்க அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். என்றார் அமைச்சர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்
### ஆகஸ்ட் 5 (2013)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.


கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.த.தங்கமுத்து
### ஆகஸ்ட் 5 (1998)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்து ஒன்றியத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்திமொழி எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடி நிலையின் போது, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**